ஆகஸ்ட் – 2019 தமிழ்மாத இதழ் 60 பக்கங்கள் ரூ.30

தொழில் உலகம் பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

# தமிழக விவசாயி உலகம்

மலர் - 20 இதழ் - 10



## பாம்பின ஆராய்ச்சியில் அசத்தும் மருத்துவர் அசோகன்!

## இந்தியாவிற்கே வழிகாட்டும் புளியங்குடி விவசாயிகள்!




## இந்தியா வல்லரசாகுது! காவிரி டெல்டா பாலைவனமாகுது!



## தேனி வளர்ப்பில் அசத்தும் ஈரோடு மாவட்ட இணையர்!

# மலைப்பாம்பின ஆராய்ச்சியில் அசத்தும் தமிழக வனக் கால்நடை மருத்துவர்!

**சின்னத்தம்பி யானையை பிடித்துக்கொடுத்த வன கால்நடை மருத்துவர் அசோகன் உடன் ஓர் நேர்காணல்!**

"பாலைப் பொழிந்து தரும் பாப்பா அந்தப் பசுமிக்க நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்து வரும் நாய்தான் அது மனிதர்க்குத் தோழனடி பாப்பா
வண்டி இழுக்கும் நல்ல குதிரை நெல்லு வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு இவை ஆதரிக்க வேணுமடி பாப்பா"



கால்நடைகளின் மேல் உள்ள காதலால் மீசைக்கார பாரதி அவற்றை ஆதரிக்க வேணு மென்று கோரிக்கை விடுத்தான்.

நமது நாடு உலகளவிலே அதிகமான கால் நடைகளைக்கொண்ட நாடு என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது. அந்த கால்நடை வளர்ப்பில் அதன் பாதுகாப்பில் முக்கியப் பங்கு வகிப்பது கால்நடை இனப் பெருக்க முறைகள், தொற்று நோயத் தாக்கா வண்ணம் பாதுகாத்திட கால்நடைகளுக்கான தடுப்பூசி வகைகள், அதற்கு சரிவிகித உணவு கொடுத்து கால்நடை வளர்ப்பில் முக்கியப் பங்காற்றுபவர்கள் கால்நடை பராமரிப்புத் துறையிலே பணியாற்றும் கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்கள் என்றால் மிகை ஆகாது.

கால்நடைகளுக்கு நோய் என்று பல்வேறு ரூபங்களில் வருகின்றது. தொற்றுநோய்கள், ஒட்டுண்ணி நோய்கள், மடிவீக்கம், பால்வாதம், மலட்டுத் தன்மை, கர்ப்பப்பை வெளி தள்ளுதல், ஜீரணமாகாத தன்மை, பூச்சி கடிக்களினால் ஏற்படும். விளைவுகள் காய்ச்சல், வயிற்று உப்புசம், மலச்சிக்கல், கன்று போட முடியாத நிலை, இன்னும் ஏராளமான சொல்லில் அடங்கா வியாதிகள் கால்நடைகளுக்கு ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

மனிதனானவன் வயிறு வலிக்கிறது. காய்ச்சல் அடிக்கிறது. உடம்பு சரியில்லை என்று வாய்விட்டுச் சொல்லி மருத்துவரிடத்தில் சிகிச்சை பெற்றுச் சென்று நலம் செய்து கொள்கிறான். ஆனால் கால்நடைகள்? எதையும் சொல்லத் தெரியாது. உடல் சரியில்லையென்றால் அசை போடாது படுத்துக் கொள்ளும். பால் சுரப்பு இருக்காது விவசாயிகள் தான் பார்த்து அவற்றிற்கு சரியான தீர்வை வைத்திய முறைகளால் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

மனித மருத்துவரை தெய்வம் என் கிறார்கள். உண்மையில் உடல்நலமில்லாத கால்நடைகளுக்கு சிகிச்சை செய்து உயிர் பிழைக்க வைப்பார்கள் தான் உண்மையில் கடவுள், பிரம்மா எல்லாம்.

நமது சொல்லிற்குக் கட்டுப்பட்டு நடக்கும் இந்தக் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதே இவ்வளவு சிரமங்கள் உள்ளதென்றால் கர்ண கடூரமாகக் காட்சியளிக்கும் கொடூரமாகத் தாக்கும் புலி, சிங்கம், காட்டெருமை, முதலை, பாம்பு, கழுதைப்புலி, யானை முதலானவற்றிற்கு சிகிச்சை அளிப்பது எவ்வளவு தெய்வீகத் தன்மை வாய்ந்தது. காட்டெருமை துரத்தியும், முதலை கடித்துக் கையில் முப்பது தையல் போட்டும் இன்னும் வனவிலங்குகள் மேல் தீராக்காதல் கொண்டவர்தான் சத்தியமங்கலம் வனச் சரகத்தில் பவானி சாகர் அணைக்கட்டுக்கும் அருகில் உள்ள சிற்றூர் காராச்சிக்கொரையில் வன கால்நடை மருத்துவமனையில் பணியாற்றும் கால்நடை மருத்துவர் அசோகன் அவர்கள்.

**நமது இந்தியாவில் மொத்தம் உள்ளதே 276 வகையான பாம்புகள்தான் அதில் நான்கு வகையான பாம்புகளுக்கு மட்டுமே விஷமுள்ளது என்பது ஆச்சரியத்தைத் தரும் விசயம்.**

கால்நடைப் பராமரிப்புத் துறையில் பணியாற்றி வன கால்நடை மருத்துவத்திற்கு வந்ததே ஓர் அசாதாரண நிகழ்வுதான் என்று ஆரம்பித்தார். இங்கே கடந்த இரண்டரை ஆண்டுகளாக பணியாற்றி வருகின்றேன். எங்களுக்கு 8 மணிக்கு மருத்துவமனையைத் திறந்து 12 மணிக்கு மூடி விட்டு வீட்டிற்குச் செல்லும் மணிக்கணக்கு என்பதே கிடையாது. உண்மையில் சொல்லப்போனால் இது 24 மணி நேர சவாலான வேலை என்பது தான் சரி.

1990ல் கால்நடை பராமரிப்புத் துறையில் நுழைந்த எனக்கு என் மன வேகத்திற்கு 100 சதவிகிதம் கால்நடைகளுக்கென்றே என் தாகத்திற்கு சரியான தீனி கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை. 1996ல் முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் பணியில் சேர்ந்தேன். 2000 வரை அங்கே பணிபுரிந்தேன். அங்கே யானை, காட்டெருமை, சிறுத்தை, பாம்புகளுக்கு அளித்த சிகிச்சைகள் எனக்கு மனநிறைவுத் தந்தது.

பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பார்கள் உலகளவில் 2968 வகைப் பாம்புகள் இருக்கின்றன. நமது இந்தியாவில் மொத்தம் உள்ளதே 276 வகையான பாம்புகள்தான். நல்ல பாம்பு, கண்ணாடிவிரியன், சுருட்டை விரியன் மற்றும் கட்டுவிரியன் முதலான நான்கு வகைப் பாம்புகளுக்கு மட்டுமே விஷம் இருக்கிறது என்றார்.




பாம்பு கடித்து இறப்பவர்களின் 70 சதவிகித எண்ணிக்கை சரியான வைத்திய முறைகளை உடனடியாகச் செய்யாததும் பாம்பு கடித்து விட்டது, இறந்து விடுவோம் என்கிற பயத்தினாலும் தான் என்பது உண்மை. நம்மிடமே இரு மாறுபட்ட கருத்துக்கள் பாம்பினைப் பற்றி உள்ளது முதலாவது கடவுளின் அவதாரமாக விசேச நாட்களில் பாம்பை பயபக்தியுடன் வணங்குவது, பாம்பினுடைய இயல்பான உணவுமுறையில் இல்லாத பால் முட்டை எனப்படைத்து இறை நம்பிக்கையாகப் பார்ப்பது ஒரு பக்கம்.

வீட்டில் வெளியில் காட்டில் பாம்பினைக் காணுகின்ற போது எதிரியாகப் பாவித்து பலபேர் தடி கொண்டு தாக்குவது என்பது இன்னொரு பக்கம். இறைவனாக வணங்கப்படும் பாம்பையே நேரில் பார்க்கும் போது தாக்குவது என்பதும் இரண்டும் எதிர் நிலைப்பட்ட கருத்துக்கள் அல்லவா என்று

நம்மைக் கேள்வி கேட்கிறார் டாக்டர் அசோகன்.

2011 முதல் 2014 வரை கோவை வ.உ.சி பூங்காவில் உள்ள மிருகக்காட்சி உயிரியல் பூங்காவில் வேலை பார்க்கும் போது தான் பாம்புகளோடு எனக்கு நெருக்கம் ஏற்பட்டது. பணியேற்ற போது அங்கு இருந்தது வெறும் 6 பாம்புகள்தான் நான் பணியிலிருந்து 2014ல் விடைபெற்றபோது 120 பாம்புகளாகப் பெருக்கிக் காட்டினேன்.



அங்கே பணியாற்றும்போது பள்ளி, கல்லூரி, பொது இடங்களில் பாம்புகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திய காரணத்தால் காயமடைந்த நோயுற்ற பாம்புகளை சிகிச்சைக்காக பொதுமக்கள் கொண்டு வந்தனர். பாம்பு பிடிக்க பயிற்சிகளை மேற்கொண்டோம். அதன் காரணமாக ஒரு ஆண்டில் மட்டும் 3000க்கும் அதிகமான பாம்புகளை வீடுகளிலிருந்து பிடிக்கப்பட்டு காடுகளில் கொண்டு போய் விடப்பட்டது பெருமைப் படக்கூடிய விசயம் என்றார்.

1996ல் முதுமலை வன விலங்குகள் சரணாலயத்தில் பணியேற்றேன். 1998ல் பந்தலூர் பகுதியில் 22 பேரைக் கொன்ற மூர்த்தி என்கிறவர் பற்றி கேள்விப் பட்டிருப்பீர்கள். அதனைப் பிடிக்கும் அரிய பணியில் நான் ஈடுபட்டேன். 11 அடி உயரமும் 6 டன் எடைகொண்ட அந்த பிரமாண்டமான யானை என்னிடம் சிக்கிக் கொண்டான். என் வாழ்நாளில் அதற்கு இணையான எடை, கம்பீரமும் கொண்ட யானையை நான் சந்திக்கவே இல்லை என்கிறார் கண்களை விரித்து புருவங்களை உயர்த்தி.

அதன் உடலில் பல வெட்டுக்காயங்கள் இருந்தன. அத்தோடு 11 குண்டுகள் இருந்தனையும் அகற்றினேன் என்கிறார். பெருமையாக இப்பொழுதும் கூட சாந்த சொரூபினியாக முதுமலைக் காட்டில் நடமாடிக் கொண்டிருக்கிறார் மூர்த்தி.

மலைப் பாம்புகளின் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றார் டாக்டர் அசோகன். இந்த மலைப்பாம்புகளின் உடலுக்குள் நடைபெறும் மாற்ற ங்களையும் இலக்கங் களையும் கண்டறிய டிரான்ஸ்மீட்டர் என்றும் கருவி பொறுத்தி விடப்பட்டுள்ளது அந்தந்த நிலையில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டறிய பேட்டரி ஒன்றும் இணைத்து காட்டில் விடுகின்றோம்.

இத்தகைய டிரான்ஸ்மீட்டர் பொறுத் தப்பட்ட பாம்புகளை காடுகளில் கொண்டு போய் விடும் பொழுது அதன் அருகில் உள்ள மரத்தில் பாக்ஸ் ஒன்று பொருத்தி வைத்து விடுகிறோம். அந்தப் பெட்டியில் உள்ள கருவிகள் அந்தக் காட்டுப் பகுதியில் உள்ள தட்பவெட்ப நிலை மற்றும் அதன் மாற்றங்களைத் துல்லியமாக பதிவு செய்கிறது. இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சி மாணவர்கள் அங்கே செல்லும் பொழுது ஆண்டெனா எடுத்துச் செல் வார்கள்.

இந்த ஆண்டெனா டிரான்ஸ்மீட்டர் பொருத்தப்பட்ட பாம்புகள் எந்த இடத்தில் இருக்கிறது என்பதனைக் காட்டும் 3 கி.மீ சுற்றளவு வரை தெளிவாகக் காட்டுகிறது. பாம் ளுபின் அருகே செல்லும் போது இதி லிருந்து எழும் 'பீப்' ஒலி அதிக சப்தமிட்டுக் காட்டும் வகையில் அமைந்திருக்கிறது.

இந்த ஆராய்ச்சிக்கு வந்திருப்பவர்கள் டேராடூன் இந்திய வனவிலங்கு ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் தமிழ்நாட்டைச் சேர்ந்த ரமேஷ் என்பவரும் இவரது ஆய்வு மாணவர்களும் தான் அதற்கு நான் துணையாகவும் ஆய்வு மாணவர்களுக்கும்

உதவியாகவும் நான் இருக்கிறேன் என்றார் பெருமையாக.

ஓர் ஆண்டு கழித்து மீண்டும் இந்த பாம்புகளைப் பிடித்து அதனுள் பத்திரமாக வைக்கப்பட்ட டிரான்ஸ்மீட்டரை வெளியே எடுத்து அந்தக் கருவிகள் மூலம் தெரிய வரும் விசயங்களை மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்துவோம். இதன் மூலம் பல ஆச்சரியமான உண்மைகள் வெளிவரும் என்றார்.

இந்தப் பாம்புகளின் வாழ்க்கை முறையை ஆராய்ந்தறிந்து மக்களுக்கு தெரியப்படுத்தவே இந்த ஆய்வு செய்யப்படுகிறது.

"சின்னத்தம்பி" யானையால் நிகழ்ந்த நிகழ்வுகளும், துன்பங்களும் விவசாயிகளையும் மக்களையும் பயமுறுத்தியதை நாம் மறக்கவில்லை. சின்னத்தம்பியைப் பிடிக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அது கோர்ட்டுக்கு போய் உச்சநீதிமன்றமே மக்களுக்கும் யானைக்கும் எந்தவித சேதமுமின்றி சின்னத்தம்பியை பிடிக்க அனுமதி அளித்தது. அதனைப் பிடித்து முகாமிற்குக் கொண்டு செல்லவும் வனத்துறை முடிவெடுத்தது.

உடுமலை அருகே சுற்றித் திரிந்த அந்த யானைக்கு மயக்க ஊசி செலுத்தி பிடித்தது.

**நல்ல பாம்பு, கண்ணாடிவிரியன், சுருட்டை விரியன் மற்றும் கட்டுவிரியன் முதலான நான்கு வகைப் பாம்புகளுக்கு மட்டுமே விஷம் இருக்கிறது.**

டாக்டர் அசோகன் அவர்களின் தலைமையிலான குழுதான் என்பது அவர் சொன்னபோது தான் தெரிந்தது அதன் பின்னர் லாரியில் ஏற்றி முகாமிற்குக் கொண்டு சென்று நலமுடன் இருப்பது நமக்குத் தெரிந்த செய்திதான்.

இவரது பணியைப் பாராட்டி கோவை மாவட்ட ஆட்சியரிடமிருந்து 3 நற்சான்றிதழ்கள் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து ஒரு சான்றிதழ் சிறந்த



கால்நடை மருத்துவர் என்று நிறைய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமிருந்து விருதுகள் என்று வாங்கிக் குவித்துள்ளார்கள்.

இவரது எண்ண ஓட்டங்களுக்கு அவரது வேகத்திலேயே பணியாற்றும் கால்நடை ஆய்வாளர் வீரக்குமார், கால்நடை பராமரிப்பு உதவியாளர் செந்தில்குமார், லேப் டெக்னீசியன் பாலாமணி அவரது ஓட்டுனர் கேசவராஜ் மற்றும் யானை ஆம்புலன்ஸ் ஓட்டுனர் கணேசன் உட்பட அனைவருமே பாராட்டுக்குரியவர்கள்.

29 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் பதவி உயர்வு வந்துள்ள விவரத்தினையும் தெரிவித்து விரைவில் காராச்சிக்கொரை வன கால்நடை மருத்துவமனையிலிருந்து அநேகமாக கோவைக்கு செல்ல இருக்கும் செய்தியினையும் கூறினார்.

அரசுப்பணி என்றாலே அதனை அலட்சியமாகப் பார்க்கும் நோக்கில் இருக்கிறார்கள். அரசுப் பணியாளர் என்று மக்கள் நினைக்கும் போக்குக்கு இவர் வேறு மாதிரி தெரிகிறார். நம் கண்களுக்கு அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றும் அவரையும் அவர் சார்ந்தோரையும் தமிழக விவசாயி உலகம் சார்பில் பாராட்டி நன்றி தெரிவித்தோம்.

**தொடர்பிற்கு : டாக்டர்.கே.அசோகன் BVSc., வன கால்நடை மருத்துவர், வனக் கால்நடை மருத்துவமனை, காராச்சிக்கொரை பவானிசாகர் 638 451, அலைபேசி :94438 83164**

**நேர்காணல் டாக்டர்.கே.வி.கோவிந்தராஜ் PhD அலைபேசி: 98427 94504, 94425 41504**